
# 11. யேசுவின் நண்பன்



பிரான்சிஸ் பணக்கார குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பையன். பிறந்தநாள் பரிசாக அவனுடைய அப்பா அவனுக்கு ஒரு வெள்ளைக் குதிரையைக் கொடுத்தார்.

பிரான்சிஸ் மற்றவர்களுக்கு உதவி செய்வதில் மிகவும் விருப்புடையவன். ஒருநாள் தங்க நாணயங்கள் அடங்கிய பையுடன் வெளியே உலாவச் சென்றான்.



S. S. P. C. 120266



பிரான்சிசுக்குப் புதுமையாக இருந்தது. தெருவில் யாரும் இல்லை. பொறுக்க முடியாத துர்நாற்றம். “ஐயா ! எனக்கு உதவி செய்யுங்கள்” என்ற ஒரு சத்தம் கேட்டது.

கண் தெரியாத, நடக்க முடியாத, உடம்பு முழுவதும் புண்கள் நிறைந்த ஒரு மனிதன் விழுந்து கிடந்தான். பிரான்சிஸ் அவனை அணுகி அவனைத் தனது குதிரையில் ஏற்றிச் சென்று ஒரு வைத்தியசாலையில் ஒப்படைத்தான். அவனைப் பராமரித்துக் குணமாக்கும் படி கூறித் தன்னிடமிருந்த தங்க நாணயங்களையும் கொடுத்தான்.

இதனால் பிரான்சிஸ் யேசுவின் நண்பன் ஆனான்.